
பொருளியல்

# அரசின் செலவின் கட்டமைப்பும் அண்மைக்காலப் போக்கும்



e-தக்சலாவ கல்விக்கூடம் The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வகை 01

# நடைமுறைச் செலவினங்கள்



- அரசாங்கத்தின் தொழிற்பாட்டுச் செலவினம் இதுவாகும். அதாவது அரச சேவைகளை நாளாந்தம் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்காக ஏற்படும் செலவினங்கள் ஆகும்.
- இவை தொடர்ச்சியாக மீண்டெழும் தன்மையுடையவை

உதாரணங்கள்:

1. சம்பளம்
2. கூலிகள்
3. ஓய்வூதியம்
4. சமுர்த்திக் கொடுப்பனவுகள்





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பொருட்கள் சேவைகள் மீதானது

அரசு நடைமுறைச் செலவொன்றிற்கு நேரடி பிரதிபலனாக பொருட்கள்/ சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்.
**உதாரணங்கள்:** சம்பளம் ,கூலிகள்

இவை எப்பொழுதும் இருபக்கச் செலவினங்களாக அமைகின்றன. மேலும் செலவீட்டில் அரச நுகர்வாக [G] உள்ளடக்கப்படுவதும் இதுவே ஆகும்

## தேசிய கடன் வட்டி

அரசு கடந்த காலங்களில் பெற்றுக் கொண்ட கடன் நிதியீட்டங்கள் தொடர்பில் செலுத்தப்படுகின்ற வட்டி ஆகும்.

## நடைமுறை மாற்றல் செலவீனம்

அரசு மேற்கொள்ளும் நடைமுறைச் செலவினத்தின் போது நேரடியாக பிரதிபலன் எதனையும் பெறாவிடில் அது நடைமுறை மாற்றலாகும்.
**உதாரணங்கள்**: ஓய்வூதிய கொடுப்பனவுகள் , விதவைகள் அனாதைகளுக்கான கொடுப்பனவு
எனவே இவை எப்பொழுதும் ஒருபக்கம் சார்ந்த செலவினங்களாக இருக்கும்.மேலும் இவை தேசியக் கணக்கீட்டில் உள்ளடக்கப்படுவதில்லை.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# நடைமுறை மாற்றல் செலவீனத்தின் உப பிரிவுகள்

**01**

## குடித்தன மாற்றல்

மக்களின் சமூக நலன் கருதி அரசினால் மேற்கொள்கின்ற ஒருபக்கம் சார்ந்த செலவினங்கள் ஆகும்

சமூக நீதியைப் பேணல்

வறுமை தணிப்பு

சமூக நலனை மேம்படுத்தல்

வாழ்க்கைத் தர மேம்பாடு



**இவற்றின் அவசியங்களை நோக்கின்**



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# 02 அரச நிறுவனம் சார்ந்த மாற்றல்

அரச நிறுவனங்களின் நலன்கருதி அரசினால் மேற்கொள்கின்ற ஒருபக்கம் சார்ந்த செலவினங்கள் ஆகும்





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வகை 02

# மூலதனச் செலவினங்கள்



- மூலதனச் சொத்துக்களை உருவாக்க அரசு மேற்கொள்கின்ற பாரிய செலவினங்கள் ஆகும்.
- இது அரசின் முதலீட்டுச்செலவினம் ஆகும்
- இவை நீண்டகாலத்தில் அபிவிருத்தியை இலக்காக கொண்டவை.
- இதன் மூலம் நாட்டில் மெய்சொத்துக்கள் அதிகரிக்கின்றன.



## மெய் சொத்துக்கள் மீதானது

அரச மூலதனச்செலவினத்தின் போது பிரதிபலனாக மெய்சொத்துக்களை அடைந்து கொள்கின்றது.

**உதாரணங்கள்:** அரச கட்டடிட உருவாக்கச் செலவு

திணைக்களம் ஒன்றிக்கு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவுச் செலவு

## மூலதன மாற்றல் மீதானது

அரச திணைக்களங்கள் அரச சார்பான நிறுவனங்களுக்கு மேற்கொள்ளும் ஒருபக்கம் சார்ந்த மாற்றல் செலவினங்கள் ஆகும்

தொகுப்பு : திரு.ச.ஜெயகுமார் பொருளியல் ஆசிரியர் (யா/ வயாவிளான் மத்திய கல்லூரி )

கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா த.தொ.தொ. ஆசிரியர் (மு/ உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

அரச மூலதனச் செலவினங்களின் அவசியம்

1. தனியார்துறை தலையிடாத/தலையிட பின் வாங்கும் பாரிய மூலதன முதலீட்டை குறை நிரப்பு செய்வதால் நாட்டின் அபிவிருத்திக்கு உதவல்
2. தனியார் துறை முதலீட்டை ஊக்கப்படுத்த அவசியமான மூலதனப் பொருட்களை வழங்குதல்
3. அபிவிருத்தி வளர்ச்சியை கருத்திற் கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளமை
4. உற்பத்தி வினைத்திறன் மட்டங்களை மேம்படுத்தல்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அரச செலவின் மூலம் நாட்டில் சமத்துவத்தை பேணுதல்

1. குடித்தன மாற்றல் செலவுகளை வினைத்திறன் ஆக்குதல்
2. பாரிய அபிவிருத்தி திட்ட செலவினங்களில் பின் தங்கிய துறைகள் பிரிவினர் பெரிதும் கருத்தில் கொள்ளப்படல்
3. மூலதனச் செலவினத்தின் மூலம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி குடும்ப வருமானத்தை உருவாக்கல்
4. செலவினங்களை வினைத்திறன் ஆக்குதல் மூலம் வெளியீடுகளை அதிகரித்தல்

தொகுப்பு : திரு.ச.ஜெயகுமார் பொருளியல் ஆசிரியர் (யா/ வயாவிளான் மத்திய கல்லூரி )

கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா த.தொ.தொ. ஆசிரியர் (மு/ உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# அரச நடைமுறை மாற்றல் செலவின் அடிப்படையில் குடித்தன மாற்றல் என்பதில் உள்ளடங்குபவை

**01**
ஓய்வூதியக் கொடுப்பனவு

**02**
உரமானியம்

**03**
சமுர்த்தி மானியம்

**04**
கர்ப்பிணித் தாய் மாருக்கரிய போசணைத்திட்டம்

**03**
புலமைப்பரிசில் மகாபொல கொடுப்பனவுகள்

**06**
விதவைகள் முதியவர்களுக்கு உதவிக் கொடுப்பனவு



தொகுப்பு : திரு.ச.ஜெயகுமார் பொருளியல் ஆசிரியர் (யா/ வயாவிளான் மத்திய கல்லூரி )

கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா த.தொ.தொ. ஆசிரியர் (மு/ உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


# அரச நடைமுறை மாற்றல்களைப் பெறும் அரச நிறுவனங்கள்

- புகையிரத திணைக்களம்
- போக்குவரத்துச் சபை
- தபால் தணைக்களம்
- மத்திய சுற்றாடல் அதிகார சபை
- பனை அபிவிருத்திச் சபை


தொகுப்பு : திரு.ச.ஜெயகுமார் பொருளியல் ஆசிரியர் (யா/ வயாவிளான் மத்திய கல்லூரி )

கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா த.தொ.தொ. ஆசிரியர் (மு/ உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




**அரச செலவினங்கள் தொழிற்பாட்டுரீதியாக நோக்கின் பின்வருமாறு நோக்கப்படுகின்றது.**





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# 2016 ஆண்டு

# மத்திய வங்கி அறிக்கையின் படி செலவினங்களின் பாகுபாடு

**நடைமுறைச் செலவினப் போக்குகள்**

| விபரம் | நடைமுறைச் செலவின் வீதமாக | | G.D.P யின் வீதமாக | |
|---|---|---|---|---|
| | 2014 | 2016 | 2014 | 2016 |
| பொருட்கள் / சேவைகள் மீதானது | 46% | 42% | 5.4% | 6.3% |
| தேசிய கடன் வட்டி | 33% | 35% | 4.2% | 5.2% |
| நடைமுறை மாற்றல் | 21% | 23% | 3% | 3.4% |

1. பொருட்கள் சேவைகள் மீதான செலவினத்தில் சம்பளங்களும் கூலிகளும் என்பதே பிரதான இடத்தை வகிப்பதாகும்.
2. நடைமுறை மாற்றலில் முறையே விவசாய உள்ளீடுகளையும் ஓய்வூதியம் , சமுர்த்திக் கொடுப்பனவுகள் பிரதான இடத்தை வகிக்கின்றன.
3. நடைமுறைச் செலவினத்தில் தேசிய கடன்வட்டி இரண்டாம் இடத்தில் உள்ளது கவனிக்க வேண்டியதாகும்.

தொகுப்பு : திரு.ச.ஜெயகுமார் பொருளியல் ஆசிரியர் (யா/ வயாவிளான் மத்திய கல்லூரி )

கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா த.தொ.தொ. ஆசிரியர் (மு/ உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk